



# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்


தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 28481235


டிடிவி தினகரன்
பொதுச்செயலாளர்

"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 10.05.2024

## அன்புச் சகோதரர் மேலூர் திரு.ஆர்.சாமி அவர்களுக்கு நினைவஞ்சலி!

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியை மட்டுமே குறிக்கோளாய் கொண்டு தன் இறுதி மூச்சு வரை இரவு, பகல் பாராமல் உழைத்திட்ட என் அன்புச் சகோதரர் மேலூர் திரு.ஆர்.சாமி அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று

இதயதெய்வம் அம்மா அவர்களின் கொள்கைகளையும், லட்சியங்களையும் மீட்டெடுக்க, லட்சோப லட்ச தொண்டர்கள் மேலூரில் ஒன்று கூடி தொடங்கிய நம் இயக்கத்தின் தொடக்கப்புள்ளியாகவும், போர்ப்படை தளபதியாகவும் செயல்பட்ட மேலூர் திரு.ஆர்.சாமி ஆற்றிய கழகப் பணிகளை எவராலும் அவ்வளவு எளிதில் கடந்து செல்ல முடியாது.

அரசியல் அழுத்தங்கள், நெருக்கடிகள், சோதனைகளுக்கு மத்தியில் கொள்கைப் பிடிப்பு, நேர்மை அர்ப்பணிப்பு மற்றும் அளவில்லா விசுவாசத்தின் அடையாளமாக விளங்கிய ஆருயிர் சகோதரர் மேலூர் திரு. ஆர்.சாமி அவர்கள் கொண்டிருந்த எண்ணமும், லட்சியமும் ஈடேறும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

கழகத்தினர் எப்படி மக்கள் பணியாற்ற வேண்டும் என்பதற்கு சிறந்த உதாராணமாக திகழ்ந்த அன்புச் சகோதரர் மேலூர் திரு.ஆர். சாமி அவர்கள் மறைந்த இந்நாளில், அவருக்கு நினைவஞ்சலி செலுத்துவதோடு, தேர்தல் களத்தில் வெற்றி முத்திரையைப் பதித்து அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தொடக்கத்திற்கான நோக்கத்தையும், இதயதெய்வம் அம்மா அவர்களின் லட்சியத்தையும் நிறைவேற்ற நாம் அனைவரும் உறுதியேற்போம்.

**டிடிவி தினகரன்**